**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**E.P.14/2022**
**in**
**O.S.No.113/2012**

Deposition of **P.W. -1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K.Menaka, Gr. III Bench clerk of this court, on 24.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : வடிவேல் Father's Name : கந்தசாமி பிள்ளை

**ஆரம்ப நேரம்**: 04.05 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1. நான் என்ன தீர்வு வேண்டி மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கடந்த 2012-ஆம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கு கடந்த 2019-ல் தீர்ப்பாகிவிட்டது, நாங்கள் எழுதிக்கொண்ட பாகப்பத்திரத்தில் பொது கிணற்றிலிருந்து எனது வீட்டிற்கு குடி தண்ணீர் கொண்டு செல்லலாம் என்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி தண்ணீர் கொண்டு செல்ல குழாய் போடும்பொழுது ஏற்பட்ட பிரச்சனைக்காக மனு தாக்கல் செய்தேன். ஏற்கனவே இருந்த பைப்பை சரிசெய்தபொழுதுதான் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை, இப்பொழுது பைப் போடும்பொழுதுதான் பிரச்சனை ஏற்பட்டது.

2. நீதிமன்ற உத்தரவிற்கு பின்னிட்டுதான் புதியதாக குடிநீர் குழாய் போடப்பட்டது என்றாலும், அதற்கு முன்னிட்டு அங்கு குடிநீர் குழாய் இல்லை என்றாலும் சரிதான். எனது உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என்னுடன் சேர்த்து 3 பேர் ஆகும். நான்தான் மூத்த நபர் ஆவேன். யார் பாகத்தின் வழியாக குடிநீர் கொண்டு செல்ல குழாய் போட்டிருக்கேன் என்றால் எனது 3வது தம்பி சுந்தரம் என்பவரது நிலத்தின்

வழியாக போட்டோம்.

3. தற்பொழுது சுந்தரத்தின் பாகம் யாரிடம் உள்ளது என்றால் எனது நடுத்தம்பி சொக்கலிங்கம் வாங்கிவிட்டார். சுந்தரத்தின் பாகத்தை நான் வாங்கிக்கொள்ள முற்பட்டேன் என்றாலும், ஆனால் சொக்கலிங்கத்திடம் கிரயம் கொடுத்துவிட்டதால் அவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எண்ணத்தில் குடிநீர் குழாய் அமைக்கும்பொழுது பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லி பொய்யான சங்கதிகளுடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. எங்களுக்குள் எப்பொழுது பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் கடந்த 1995-ஆம் ஆண்டு ஏற்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை பாத்திரத்தின்படி சுந்தரம் பாகத்தின் வழியாக குடிநீர் குழாய் கொண்டு செல்லலாம் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எவ்வளவு அளவுள்ள குழாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்லலாம் என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் 2-1/2” பைப் மூலம் தண்ணீர் கொண்டு செல்ல பாகப்பத்திரத்தில் உரிமை கொடுக்கப்பட்டுள்ளதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் பத்திரத்தில் குடிநீர் கொண்டு செல்ல குழாய் அமைக்க உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எங்களது நிலத்திற்கு வடக்குபுறத்தில் கிழமேலாக ஒரு பொது பாதை உள்ளது என்றால் சரிதான்.

6. வழக்கு சொத்திலிருந்து எனது வீட்டிற்கு குடிதண்ணீரை மேற்கண்ட பொதுபாதை வழியாக கொண்டு செல்ல வாய்ப்பு இருந்தும், ஒரு பிரச்சனையை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எதிர்மனுதாரர்களின் நிலத்தின் வழியாக குடிநீர் குழாயை அமைக்க முற்பட்டு வருகிறீர்கள் என்றால் எனக்கு பாகப்பத்திரம் மூலம் ச.எண்.230/3 கிணற்றிலிருந்து ச.எண்.230/1B நிலத்தின் வழியாக குடிநீர் குழாய் கொண்டு செல்ல உரிமை என்றுதான் எழுதப்பட்டுள்ளது. ச.எண்.32-ல் நான் குடியிருந்து

வருகிறேன்.

7. கடந்த 1995-ல் பாகம் பிரிக்கப்பட்ட நாளிலிருந்து கடந்த 2012-ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யும் வரை நான் கூறுவது போல் குடிநீர் குழாய் எதுவும் அங்கு இல்லை என்றால் சரிதான், பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள கிணற்றில் மின் இணைப்பு வந்தபிறகுதான் வழக்கு தாக்கல் செய்தேன், அதன் பின்னிட்டுதான் குடிநீர் எடுக்க குழாய் அமைக்க முற்பட்டேன்.

8. பொது கிணற்றிற்கு மின் இணைப்பு எந்த ஆண்டு பெறப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது நடு சகோதரர் சொக்கலிங்கம் தற்பொழுது உயிருடன் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கு ஒருதலைபட்சமாக(Exparte) தீர்மானிக்கப்பட்டது என்றால் சரிதான்.

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க எதிர்மனுதாரர்கள் தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது, வேண்டுகோள் ஏற்கப்பட்டு, வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம் : 04.18 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D.jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - E.P.No.14/2022, Dt.24.04.2025.